காரைக்கால் தெற்கு தொகுதியில் தொடர் மின்வெட்டை கண்டித்து காரைக்கல் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தெற்கு தொகுதியில் உள்ள தலைமை மின்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில கழக அமைப்பாளரும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எ.எம். எச். நாஜிம், தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நாக தியாகராஜன், வடக்கு தொகுதி ஒருங்கிணைப்பாளர் பிரபு என்கிற பிரித்திவிராஜ், அமுதா ஆறுமுகம், கழக நிர்வாகிகளும் மற்றும் கழக உறுப்பினர்களும் ஏராளமானோர் கலந்துகொண்டு கண்டன குரல் எழுப்பினர்.

மீண்டும் மீண்டுமா...

பொய் பேசும் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா!

ஆதாரங்களை வெளியிட்ட ஐயன் கார்த்திகேயன்!

சட்டமன்றத்தில் நேற்று பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, 2020-க்கு முன்பு தமிழ் நாட்டில் போதை கலாச்சாரம் இல்லைஎன்பதைநாங்கள்மீண்டும் உறுதியாகப் பதிவு செய்கிறோம்.போதைகலாச்சாரம்அதிகமாக இருந்தால் குழந்தைகள் மீதுபாலியல்வன்கொடுமைகள் நடக்கும்.

2020-இல் 4,038 போக்சோ (POCSO) வழக்குகள் பதிவாகின. 2021-இல்6,064,2022-இல்6,580, 2023-இல் 6,968 மற்றும் 2024-இல் 10,046 போக்சோ வழக்குகள் பதிவாகியுள்ளன.

போதைப் பொருளுக்கு எதிராக எத்தனை கூட்டங்கள் கடந்த5ஆண்டுகளில்நடந்தன?

இந்த ஆதாரங்கள் எல்லாம் தி.மு.க. ஆட்சியில் காவல்துறையால் கொடுக்கப்பட்ட அறிக்கை; இது தமிழக வெற்றிக் கழகத்தின் அறிக்கை இல்லை என்றார்.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா அ.தி.மு.க. ஆட்சியில் போதைப்பொருள் நடமாட்டம்இல்லைஎன்றுசட்டமன்றத்தில் தெரிவித்துள்ள தகவல் பொய் எனகடந்ததி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அரசின் "உண்மை சரிபார்ப்புக் குழு" திட்ட இயக்குநராக இருந்த ஐயன் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பதிவில், "**தமிழ்நாட்டில் 2020க்கு முன்பாக போதை கலாச்சாரமே இல்லை என்ற பொய்யைசட்டசபையில்வைத்துஅமைச்சர் ஆதவ் பேசுகிறார். அதாவது, 2020க்கு முன்பு போதைப் பொருளை யாருமே பயன்படுத்தல போல. ஆனா Data பொய் சொல்லாது, Narcotics Drugs & Psychotropic Substance Act fortheyear2017படி2017ம்3812ஆக இருந்த வழக்குகள், 2020ம் ஆண்டே 5403 ஆக அதிகரித்து விட்டது என்று ஒன்றிய அரசு தரவுகளையே வழங்கி இருக்கு.** https://mha.gov.in/MHA1/Par2017/pdfs/par2022-pdfs/RS-14122022/839.pdf

2020ல் போதைப் பொருள் தொடர்பானவழக்குகளில்தமிழ்நாடு3ம்இடத்தில் இருந்து இருக்கு.

https://timesofindia.indiatimes.com/city/chennai/tamil-nadu-third-in-cases-registered-under-narcotics-act/articleshow/86414626.cms

2019ல் தமிழ்நாட்டில் இருந்து 28750 கிலோ கஞ்சா தொடர்பான போதைப்பொருட்கள்கைபற்றப்பட்டன. அது2020ல்298678கிலோவாகஅதிகரித்து இருந்தது.

https://sansad.in/getFile/annex/260/AU705.pdf?source=pqars

2017ல் மதுரையில் கஞ்சா, மதுபானம் போன்ற வஸ்துகளை படித்த இளைஞர்களுக்குதொடர்ந்துசப்ளைசெய்து, போதை பழக்கத்துக்கு அடிமையாக்கி அவர்களை குற்றச் செயல்களில் ரவுடி கும்பல்கள்ஈடுபடுத்துவதாகசெய்திகள் வந்த அப்போ பேப்பர் படிக்கலையா ?

https://hindutamil.in/news/tamilnadu/215176-.html **பவுடர் நுணுக்குவது நுட்பமான ஆட்கள் கூட இருக்கும் போது கேட்டு தெரிஞ்சுக்கோங்க சார்" என தெரிவித்துள்ளார்.**

ஐயன் கார்த்திகேயன்
உண்மை சரிபார்ப்புக் குழு முன்னாள் திட்ட இயக்குநர்

கருநாடக வனத்துறையினரால் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொலை!

அண்டை நாடு, அண்டை மாநிலங்கள் தமிழர்களைப் படுகொலை செய்யும் நிலைக்கு முடிவு இல்லையா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக. 18- திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கருநாடக மாநிலம், சாம்ராஜ்நகர் மாவட்டம் ஹானூர் தாலுகாவில் உள்ள காவிரி வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியான ஷாக்யா வனப்பகுதியில், மான்களை வேட்டையாடியதாகக் கூறி, ஜகன்னாததொட்டி, மரியமங்கலம், லாசர்தொட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அந்தோணி சாமி, ஜான் ரோஸ் பீட்டர், குமார் ஆகிய மூன்று தமிழர்களை கருநாடக வனத்துறையினர் சுட்டுப் படுகொலை செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கொடுமை?

அப்பகுதிக்குள் மான்களை வேட்டையாட முயன்றதால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுவது ஏற்கத்தக்க தல்ல. சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டால், அதற்காகக் கைது செய்யலாம்; சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஆனால், சுட்டுக் கொல்ல வேண்டிய அவசியம் என்ன? மான்களை வேட்டையாட வந்தார்கள் என்று மனிதர்களை வேட்டையாடும் உரிமையை கருநாடக வனத் துறைக்கு யார் கொடுத்தது? யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கொடுமை? இதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு அரசின் சார்பிலும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். கருநாடக அரசு இதற்கு உரிய பதிலைக் கூற வேண்டும் என்பதுடன், பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்குக் கருநாடக அரசு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும்.

ஏற்கெனவே 2015 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் 20 தமிழர்கள் செம்மரம் கடத்த முயன்றதாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட கொடுமை நடந்தது.

இந்தியக் கடலோரம் அண்டை நாட்டுக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் படுகொலை, ஒரே நாட்டுக்குள் அண்டை மாநில அரசுகளால் இப்படி தமிழர்கள் படுகொலை ஆவதற்கு முடிவேது?

தமிழர்கள் உயிர் என்ன மலிவுப் பொருளா?

கருநாடக அரசு, உணர்ச்சிப்பூர்வ நிகழ்வில், உரிய நடவடிக்கையைத் தாமதிக்காமல் எடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவை தனியார் கல்லூரி மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி கேட்டு

ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்!

கள்ளக்குறிச்சி,ஆக.18- கோவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் படித்த கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பகுதியை சேர்ந்த மாணவர் அமுதன் படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி விசாரணை கோரியும், போதைப் பொருட்களை தடுக்க தவறிய தவெக அரசை கண்டித்தும் ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளின் சார்பில் கள்ளக்குறிச்சி கச்சேரி சாலை பகுதியில், தெற்கு மாவட்ட செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி எம்.பி.தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ. ஜி.ஆர்.வசந்த வேல் ஆகியோர் முன்னிலை வகித்து கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், நீதி வேண்டும், நீதி வேண்டும் மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி வேண்டும், கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம் போதை பொருட்களை தடுக்கத் தவறிய காவல்துறையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நீதி எங்கே, நீதி எங்கே அமுதன் படுகொலைக்கு நீதி எங்கே, தமிழக அரசே தவெக அரசே மாணவன் அமுதன் படு கொலையை கோஷ்டி பூசலாக மாற்றாதே, சட்டம் ஒழுங்கு சீர் குலைத்து தமிழ்நாட்டை கொலை, கொள்ளை மாநிலமாக மாற்றிய தவெக அரசை கண்டிக்கிறோம் என பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி துணை செயலாளர் அங்கையற்கண்ணி, மாநில நிர்வாகி பெருநற்கில்லி, தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ராமமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் கருணாகரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முகமது அலி, தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் பிரபு, பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன், மாவட்ட துணை செயலாளர்கள் வாணியந்தல் ஆறுமுகம், புவனேஸ்வரி பெரு மாள், திருநாவுக்கரசு, தெற்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் இளங்கோவன், ஒன்றிய செயலாளர்கள் சத்தியமூர்த்தி, அன்புமணிமாறன், அரவிந்தன், நெடுஞ்செழியன், கனகராஜ், அண்ணாதுரை, பெருமாள், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, ராஜவேல், முருகன், வைத்திய நாதன், சந்திரசேகரன், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருள், தேமுதிக ஒன்றிய செயலாளர் நல்லதம்பி உள்பட திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் முடிவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட துணை செயலாளர் காமராஜ் நன்றி கூறினார்.

சென்னை புறநகர்

மின்சார இரயில் பெட்டிகளுக்குக் கதவுகள் பொருத்துக!

கலாநிதி வீராசாமி எம்.பி. – ஒன்றிய இரயில்வே துறை அமைச்சருக்கு கடிதம்!

புதுடெல்லி, ஆக. 18- வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்கள் ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், சென்னை புறநகர் இரயில் பெட்டிகளுக்கு, தானியங்கி கதவுகளைப் பொருத்தி, இரயில் பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தென்னக இரயில்வேயின் கட்டுப்பாட்டில் இயங்கும் சென்னை புறநகர் மின்சார இரயில்கள் மூலம் நாள்தோறும் லட்சக்கணக்கான பயணிகள் பயணம் செய்கின்றனர். அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள், வியாபாரிகள் என தினந்தோறும் சென்னைக்கும், மற்றப் பகுதிகளுக்கும் வந்து செல்லும் பயணிகள் பயன்படுத்தும்

முக்கியமான போக்குவரத்து சாதனமாக இந்த புற நகர் இரயில்கள் விளங்குகின்றன. இந்த இரயில்களில் காலையும், மாலையும் மிகுந்த கூட்டமாக மக்கள் செல்லும் போது, அவ்வப்போது, கீழே விழுதல், போன்ற விபத்துகள் ஏற்பட்டு, உயிர் பலிகளும் சில சமயங்களில் நிகழ்கின்றன. எனவே இந்த இரயில்களில் தானியங்கிக் கதவுகள் பொருத்தப்பட்டால் இது போன்ற விபத்துகளைத் தவிர்க்க முடியும். பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

மாண்புமிகு இரயில்வே அமைச்சராக உள்ள தாங்களே இது போன்ற இரயில்களில் தானியங்கி கதவுகள் பொருத்த வேண்டிய அவசியம் குறித்து எடுத்துக் கூறியுள்ளீர்கள்.

மேலும் பாராளுமன்ற பொது கணக்குக் குழு கூட இரயில்வே துறையின் பாதுகாப்பு அம்சங்கள் உயர்த்துவது குறித்த தன் பரிந்துரைகளில், புறநகர் இரயில்களில் விபத்துகளைக் குறைக்க, தானியங்கி கதவுகள் பொருத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

இவ்வாறு இரயில் பெட்டிகள் தானியங்கிக் கதவுகள் பொருத்தி சோதனை செய்வதற்காக ஒரு சோதனை திட்டம், அதாவது பைலட் புரோஜெக்ட் ஒன்று திட்டமிடப்பட்டு, அதற்கான டெண்டர் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு இன்னமும் இறுதி செய்யப்படாமல் உள்ளது. என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

எனவே, இந்த ஒப்பந்தப் புள்ளிகள் விரைந்து ஆய்வு செய்யப்பட்டு தக்க முடிவெடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகள் பிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். மேலும் இச்சோதனை திட்டம் வெற்றிப் பெற்றால் சென்னை புறநகர்களையும் இணைக்கும் மின்சார இரயில் பெட்டிகளில் தானியங்கிக் கதவுகளை விரைவில் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர்.கலாநிதி வீராசாமி அவர்கள் கூறியுள்ளார்.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் தியாகி விஸ்வநாத தாஸ் நகர் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 17 வது வட்ட செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். 17 வது வட்ட நிர்வாகிகள் எஸ். பாலாஜி, சி.மூர்த்தி, கே. சண்முகப்பிரியன், எஸ். சிவக்குமார்,டி. திவாகர், ஜி. சுரேஷ், குமார்,எம். ஜான்சன், ஜி. பூபாலன், பர்மா நகர் தினேஷ் சங்கர், சரவணன் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

மாதர்பாக்கம் பா.செ.குணாசேகர்

சகோதரி எம்.விஜயா முனுசாமி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

திருவள்ளூர். ஆக. 18 திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மாதர்பாக்கம் பா.செ. குணாசேகரின் சகோதரியும் கும்மிடிப்பூண்டி ஊராட்சி மாநெல்லூர் முன்னாள் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலருமான எம். விஜயா முனுசாமி (வயது 62) நேற்று (17.08.2026) பிற்பகல் 12.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (18.8.2026 - செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அவரது கிராமத்தில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம், காட்டுப்பாக்கம் ஊராட்சி விநாயகபுரம் கிளை பாக இளைஞரணி அமைப்பாளர் சிலம்பரசன் 13ம் நாள் நினைவு நாளையொட்டி படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் கலந்து கொண்டு திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் காட்டுப்பாக்கம் கிளை கழக நிர்வாகிகள் கே.எஸ்.புகழேந்தி, ஜி.டி.அருண்குமார், கே.கே.முரளி, பி.ஜி.கிருஷ்ணன், கே.வி.சுப்பையா, எம். நடேசன், கே.ரமேஷ், பி.செந்தமிழரசு, ஈ.சிவா, ஆர்.கே.பிரகாஷ், ஜெ.வெங்கடேசன், கே.அலெக்ஸ் பாண்டியன், டி.வினோத், வி.புஷ்பராஜ், ஏ.செல்வகுமார், ஆர்.சின்னா, ஏ.தமிழரசன், ஆர்.ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.